**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 489/2025**

**Prosecution witness : அ.சா.1** **Date : 07.02.2026.**

| Name : சிவக்குமார் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குப்பம்பட்டியில் குடியிருந்து ஜவுளி வியாபாரம் வேலை செய்கிறேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. கடந்த 10.05.2025 ம் தேதி நான் ஜலகண்டாபுரம் சென்றுவிட்டு வார்ப்பு இருச்சக்கர வாகனத்தில் தறிக்காரர் கொண்டு சென்றுக்கொண்டிருந்தபோது ரத்தினவேல் மற்றும் ஜெயவேல் இருவரும் எனது வாகனத்தை மறித்தார்கள்.

2. இரத்தினவேல் என்பவர் என்னை தேவடியா பையா என்று கெட்டவார்த்தையால் பேசினார். இரத்தினவேல் என் சட்டையை பிடித்துக்கொண்டிருந்தபோது ஜெயவேல் செங்கல்லை எடுத்து என்னை அடிக்க முயற்சி செய்தபோது தடுத்தேன். அப்போது எனது தலையில் கல்லால் அடித்து காயம்ஏற்படுத்தினார்கள்.

3. இரத்தினவேல் மனைவி வினோதினி மற்றும் ஜெயவேல் மனைவி சௌந்தர்யா, ரத்னா ஆகியோர் வந்து அடித்தார்கள். பிறகு நான் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்திற்கு சென்று தகவல் சொல்லிவிட்டு ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன்.

4. காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு

செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

5. எதிரிகள் அடித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஜலகண்டாபுரம் காவல் நிலையத்திற்கும் ஜலகண்டாபுரம்அரசு மருத்துவமனைக்கு எவ்வளவு தூரம் இருக்குமென்றால் 100 மீட்டர் தொலைவு இருக்கும். நான் ஜலகண்டாபுரம் காவல் துறையினர் சொல்லி மருத்துவமனைக்கு சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6. எனக்கு ஏற்பட்டது சாதாரண காயம் என்று மருத்துவர் கூறியுள்ளார் என்றால் ஆமாம். எனக்கு காயம் எதுவும் ஏற்படாமல் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விட்டு வேண்டுமென்றே மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் இல்லை.

7. நான் வழக்கிற்கு சம்மந்தமில்லாத நபர்களை பற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன எதிரிகளுடைய மனைவிகள் இருவரும் நீக்கம் செய்துவிட்டார்கள் என்றால் இருந்தார்கள். எனக்கு உடன்பிறந்தவர்கள் மூன்று ஆண்கள், 2 பெண்கள், உள்ளனர். எனது தம்பி காவலாரகவும், மற்றொருவர் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறார்.

8. காவல் துறையில் எனது தம்பி பணிபுரிவதால் அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 489/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 07.02.2026.**

| | |
|---|---|
| **Name : குஞ்சம்மாள்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் குப்பம்பட்டியில் குடியிருந்து வருகிறேன்.அ.சா.1 எனது மகன் ஆவார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக எனது மகள் ஜலகண்டாபுரம் சென்றுவிட்டு இருச்சக்கர வாகனத்தில் வந்தபோது ரத்தினவேல் மற்றும் ஜெயவேல் இருவரும் அவரது வாகனத்தை மறித்தார்கள்.

2. இரத்தினவேல் என்பவர் அ.சா.1 கல்லை எடுத்து முதுகில் அடித்தார்கள்.எனது மகனை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனை கொண்டு சென்று சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். போலீசார் விசாரிக்கும்போது அவ்வாறு சொன்னேன் என்றால் ஆமாம். அ.சா.1 எனது மகன் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

மறுவிசாரணை இல்லை.

ஒம்/— தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 489/2025**

**Prosecution witness : அ.சா.3** **Date : 07.02.2026.**

| | |
|---|---|
| **Name : சத்யா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குப்பம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. கடந்த 4 மாதத்திற்கு முன்பாக காலை 11.00 மணிக்கு ஜலகண்டாபுரம் எனது கணவர் சென்றுவிட்டு வார்ப்பு இருச்சக்கர வாகனத்தில் தறிக்காரர் கொண்டு சென்றுக்கொண்டிருந்தபோது மாரியம்மன் கோவில் அருகே ரத்தினவேல் மற்றும் ஜெயவேல் இருவரும் எனது கணவரை சண்டைக்கு இழுத்தார்கள்.

2. ஜெயவேல் என்பவர் எனது கணவரை கல்லை எடுத்து தலையில் கல்லால் அடித்து காயம்ஏற்படுத்தினார். பிறகு நான் எனது கணவரை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3. சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதெல்லாம் பொய் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**